(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 181/2023 அ.சா.3

Name : **திரு.** சுந்தரபாண்டியன்

Father's name :

Village :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2026.

**( எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது மதிச்சியம் சட்ட ஒழுங்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.11.2022–ம் தேதி நான் தெப்பக்குளம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது அழகுராணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில் அதன் தன்மைக்கேற்ப தெப்பக்குளம் காவல் நிலைய குற்ற எண்.618/2022 பிரிவு 436 IPC–ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **அந்த புகார் மனு அ.சாஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 13.11.2022–ம் தேதி காலை 11.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவ சாட்சிகள் **சாட்சி எண்.5 அஜய் மற்றும் சாட்சி எண்.6 லட்சுமி** ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகஜர் அ.சாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த மாதிரி வடைபடம் அ.சாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சம்பவ இடத்தை சோதனையிட்டு தகுந்த அறிக்கை வழங்குமாறு தடய அறிவியல் துறைக்கு காவல் ஆய்வாளர் அவர்களால் கடந்த 13.11.2022–ம் தேதி கடிதம் அனுப்பப்பட்டது. அந்த கடிதத்தின் அடிப்படையில் தடய அறிவியல் துறையால் அறிக்கை

வழங்கப்பட்டது. **அந்த தடயவியல் அறிக்கை அ.சாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பின்னர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். கடந்த 19.11.2022-ம் தேதி 15.00 மணிக்கு எதிரியை அவரது வீட்டின் அருகே காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் எதிரியை காவல் நிலையம் அழைத்து சென்று விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி எதிரியை அன்றைய தினமே தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். நான் இவ்வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது தெப்பக்குளம் காவல் நிலைய குற்ற எண்.618/2022 இதச பிரிவு 436 IPC-ன் கீழ் 20.11.2022-ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

நான் குறிப்பிடுவது போல் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகாரினை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றும், சம்பவ இடம் சென்று புலன் விசாரணை மேற்கொண்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின் யோசனையுடன் எதிரியை சட்டத்திற்கு புறம்பாக குற்ற சம்பவத்துடன் இணைத்து முறையாக புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை -</u>** இல்லை.

Sd/- சுந்தரபாண்டியன்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.08.07 07:05:32 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.